## தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2020

ஆண்டு: 5 திகதி: 21.11.2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. பிரியதர்சினி பாஸ்கரதேவன்
செல்வி. கவிஜா விக்னேஸ்வரன்

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

# அப்துல் கலாம்

அப்துல் கலாம் இந்திய நாட்டின் இராமேஸ்வரத்தில் பிறந்தார். அவர் அவுல் பக்கீர் ஜெயினாலாப்தீன், ஆஸியா உம்மா தம்பதியினரின் மகனாவார். அப்துல் கலாம் 1931 அக்டோபர் 15ஆம் திகதி பிறந்தார்.

அவர்களது குடும்பம் ஏழ்மையானது. வறுமை அவர்களது குடும்பத்தை வாட்டியது. தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்றார்.

பாடசாலை முடிந்ததும் பத்திரிகை விநியோகம் செய்தார். உயர்கல்வியை திருச்சியில் புனித ஜோசப் கல்லூரியில் கற்றார். அவர் இயற்பியல் துறையில் கற்று இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார்.

சென்னையில் உள்ள எம்.ஐ.ரி கல்லூரியில் சேர்ந்து விண்வெளி பொறியியல் கற்றார். அத்துறையில் முதுகலைமானிப் பட்டத்தையும் பெற்றார். இதுவரை ஐந்து ஏவுகணைத் திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். 2002ம் ஆண்டு ஜூலை 25இல் 11வது இந்திய குடியரசின் தலைவராகப் பதவியேற்றார். 2007ம் ஆண்டுவரை இந்திய குடியரசின் தலைவராகப் பதவிவகித்தார். இந்திய அரசு பாரதரத்னா விருதினை வழங்கிக் கௌரவித்தது. பாரதரத்னா விருதுபெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையைப் பெற்றார்.

டாக்டர் அப்துல் கலாம் சிறந்த எழுத்தாளருமாவார். அவரது அக்கினிச் சிறகுகள் அற்புதமானதொரு நூலாகும். இளைஞர்களே கனவு காணுங்கள். உங்கள் கனவு தாய்நாட்டின் உயர்ச்சிக்கானதாக இருக்க வேண்டும். தான் பிறந்த நாட்டின் உயர்ச்சிக்காகப் பாடுபட்ட உத்தம மனிதர் அப்துல் கலாம்.

அப்துல் கலாம் அவர்கள் 27.07.2015 இல் இயற்கை எய்தினார். அவரது பூத உடல் அவரது சொந்த ஊரான இராமேஸ்வரத்தில் 30.07.2015 இல் சகல அரச மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப்பட்டது

1) அப்துல் கலாம் அவர்கள் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?

______________________________

2) அப்துல் கலாம் அவர்களின் பெற்றோரின் பெயர்களை எழுதுக?

______________________________

______________________________

3) பாடசாலை முடிந்தபின் அப்துல் கலாம் எவ்வாறு குடும்பத்திற்கு உதவினார்?

______________________________

______________________________

4) அப்துல் கலாம் கல்வி கற்ற இரு கல்லூரிகளின் பெயர்களை எழுதுக?

5) எத்தனை ஆண்டுகள் அப்துல் கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக பதவி வகித்தார்?

6) அப்துல் கலாம் அவர்களை கௌரவிக்கும் பொருட்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட விருது யாது?

7) அப்துல் கலாம் அவர்கள் எழுதிய புத்தகம் ஒன்றைக் குறிப்பிடுக?

8) அப்துல் கலாம் அவர்களின் பூதவுடல் எங்கே அடக்கம் செய்யப்பட்டது?

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**2.1) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொற்களை எழுதுக**

1) சூரியன் ____________________

2) ஆகாயம் ____________________

3) மகன் ____________________

4) அன்பு ____________________

5) சோறு ____________________

(5 புள்ளிகள்)

**2.2) பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக**

1) கருமை + கல் ____________________

2) பால் + குடம் ____________________

3) ஐந்து + பத்து ____________________

4) வெள்ளை + மேகம் ____________________

5) பல + கலாச்சாரம் ____________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**3.1) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1) Society : ____________________________________________

2) Cousin : ____________________________________________

3) Gloves : ____________________________________________

4) Winter : ____________________________________________

5) Snow man : ____________________________________________

(5 புள்ளிகள்)

**3.2) பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

1) இராவணனின் தங்கை ( கைகேயி / சூர்ப்பனகை )

2) இராமனின் தாய் ( கோசலை / சுமித்திரை )

3) இராவணனின் தம்பி ( கும்பகர்ணன் / இலக்குமணன் )

4) சீதையின் தந்தை ( தசரத சக்கரவர்த்தி / சனக மகாராசா )

5) கைகேயின் தோழி ( குந்தி / கூனி )

(5 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**4.1) பின்வரும் பழமொழிகளை, கீழே தரப்பட்டுள்ள சொற்தொகுதியால் பூர்த்தி செய்க.**

| | | |
|---|---|---|
| ஐம்பதில் வளையுமா? | தூற்றிக்கொள் | கறிக்கு உதவாது |
| அக்கரை பச்சை | அம்மியும் நகரும் | |

1) காற்றுள்ள போதே ______________________

2) ஐந்தில் வளையாதது ______________________

3) ஏட்டுச் சுரைக்காய் ______________________

4) அடிமேல் அடி அடித்தால் ______________________

5) இக்கரை மாட்டிற்கு ______________________

(5 புள்ளிகள்)

**4.2) பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக**

1) குழந்தை ______________________

2) வரம் ______________________

3) வீரன் ______________________

4) குடும்பம் ______________________

5) தமிழன் ______________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**5.1) பின்வரும் சொற்களை பொருள் விளங்க வசனம் அமைக்கவும்**

1) வளி

___

___

2) கரை

___

___

3) ஒலி

___

___

4) அழி

___

___

5) அலகு

___

___

(5 புள்ளிகள்)

**5.2) பின்வரும் வாக்கியங்களில் "வா" என்ற சொல்லை பொருத்தமான காலத்துக்கு மாற்றி எழுதுக**

1) கமலா நாளை ___

2) மாணவர்கள் நேற்று ___

3) நான் இப்போது ___

4) நீங்கள் நேற்று ___

5) அதிபரும் ஆசிரியரும் நாளை பாடசாலைக்கு ___

(5 புள்ளிகள்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுக**

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட கோவிட்-19 நோய்த் தொற்று பரவலைத் தடுக்கும் முகமாக தமிழ்ப் பாடசாலை வகுப்புகள் இயங்கலை (online) மூலமாக நடாத்தப்பட்டன. இயங்கலை மூலமாக உமது கற்றல் அனுபவத்தினை விளக்கி உமது உறவினர் ஒருவருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்**

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து 15 வசனங்கள் எழுதுக

1) தமிழர்கள் கொண்டாடும் பண்டிகை
2) அவுஸ்திரேலியாவின் பருவகாலங்கள் (seasons)
3) தமிழ் வளர்த்த பெரியார்
4) வாணி விழா